KB14-1-4-TA

# இயேசுவே மேசியா என்பதை உறுதிபடுத்திடும் 16 தீர்க்கதரிசனங்கள் - பாகம் 1 - நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சியில்.். இந்த ப{மிக்கு விசெசூpத்த நபரான மெசியாவை அனுப்ப பொவதாக தெவன் ஏற்கனவெ தமது தீர்க்கதரிசிகள் ஷலம் பல வருட';களுக்கு முன்பாகவெ டிசால்லியிருக்கிறாரா, குறிப்பாக என்ன தீர்க்கதரிசன';களை டிகாடுத்திருக்கிறார், எபிரெய வெதத்தில் எந்த பகுதிகளில் அந்த வார்த்தைகள் இருக்கிறது, அந்த தீர்க்கதரிசன';கள் உரைக்கப்பட்ட ய{த கூன';கள் வரப்பொகிற மெசியாவைக் குறித்து டிசால்லப்பட்ட குறிப்பான வார்த்தைகளை பஜரிந்துடிகாண்டார்களா, இந்த டிசய்திடிதாடரில் நாம் சுமார் 16 தீர்க்கதரிசன வார்த்தைகளை பார்த்திடலாம் ஆதாம் முதல் ஆபிரகாம் வரை.். மொசெ முதல் தாவீது வரை.். ஏசாயா முதல் தானியெல் சகரியா வரை. நாம் கெட்கலாம்.். இந்த மறுக்க முழயாத தீர்க்கதரிசன';கள் இயெசு தான் மெசியா என்பதை நிருபித்துள்ளதா,

எனது முதல் விருந்தினர் டாக்டர். வால்டர் டிபய்சர். அவர் இப்பொதுள்ள இறையியல் மெதைகளில் ஒருவர் மற்றும் இன்றைக்கு அடிமரிக்காவில் எபிரெய பத வசன';களின் வெத வல்லுநர். டாக்டர் டிகய்சர் முதன்மை தலைவரும் பிரசித்தடிபற்ற

பர்ய ஏற்ப்பாட்டு விரிவஜரையாளராகவஜம் கார்டன் - கான்டிவல் இறையியல் டிசமினரி ஞாமில்டனில் இருக்கிறார்.். மா!;காவ்டிசட்!;. இரண்டாவதாக.். டாக்டர் டெரல் பாக். அவரும் நிகர்;கால இறையியல் வல்லுநர்களில் ஒருவர் பஜதிய ஏற்ப்பாட்டு வல்லுநராக இருக்கிறார். அவர் பஜதிய ஏற்பாட்டு ஆராய்ச்சியில் முதன்மை ஆராய்ச்சி விரிவஜரையாளராக இருக்கிறார் பாரம்பரிய கலாச்சார அமைப்பின் ஒரு';கிணைப்பாளராக டாலா!; இறையியல் டிசமினரியில் இருக்கிறார் டாலா!;.். டிடக்சா!;. இந்த விசெஷpத்த நிகர்;ச்சியில் இணைந்திடு';கள் கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு இரண்டு விருந்தினர்கள் உள்ளனர், டாக்டர் வால்டர் கெய்சர் மற்றும் டாக்டர். டேரல் பாக். வால்டர் கெய்சர்; முதன்மை தலைவரும் பிரசித்தபெற்ற பழைய ஏற்ப்பாட்டு விரிவுரையாளராகவும் கார்டன் - கான்டிவல் இறையியல் செமினரி ஹாமில்டனில் இருக்கிறார், மாஸ்காவ்செட்ஸ். இவர் 40 புத்தகங்களை எழுதியிருக்கிறார். டாக்டர். டேரல் பாக் புதிய ஏற்பாட்டின் ஆராய்ச்சி பிரிவின் மூத்த விரிவுரையாளராக இருக்கிறார். இவர் பாரம்பரிய கலாச்சார பிரிவின் ஒருங்கிணைப்பாளராக டாலாஸ் இறையியல் செமினரியில் இருக்கிறார் டாலாஸ், டெக்சாஸ். இவர் 30ற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறார், அவைகளில் சிலவற்றை முடிக்க

10 வருடங்களுக்கு மேலானது. இவர்கள் பல ஆராய்ச்சிகளை செய்திருக்கின்றனர், அவர்கள் இங்கிருப்பதில் எனக்கு மகிழ்ச்சி.

இன்றைக்கு நாம் நமது வேதத்தில் வாசிக்கும்படியான மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை தேவன் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே முன்னறிவித்திருக்கிறார் என்பதை பார்த்து வருகிறோம். ஆவை மிகவும் எளிமையான முறையில் துவங்கின, தேவன் அதை நிலைப்படுத்தி, அதை கொஞ்சம் கொஞ்சமாக காலம் செல்ல செல்ல அதை மேம்படுத்தினார். இவையனைத்தும் தேவ்ன முன்குறித்த அந்த நபரைப் பற்றிய செய்திகளை நமக்கு தெளிவுபடுத்துகிறதாக அமைந்தது. சரி, டேரல், முந்தைய நிகழ்ச்சிகளை பார்க்க தவறியவர்கள் புரிந்துகொள்ள ஏதுவாக இதற்கு முன்பு பார்த்தைவைகளை சொல்லுங்கள். நாம் எங்கிருந்து ஆரம்பித்தோம் என்பதை சுருக்கமாக துரிதமாக சொல்லுங்க.

**டாக்டர். டேரல் பாக:** ஆதியிலிருந்து அந்த வித்து உண்டாயிருந்தது. அந்த வித்து யாராகவேண்டுமானாலும் இருக்கலாம், ஏவாளிலிருந்து வரும் ஆண் சந்தியானவர். மேலும் இந்த வித்தானவர் தான் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்பது நமக்கு தெரியும், சர்ப்பம் தீமையை குறிக்கிறது அதாவது சாத்தானைக் குறிக்கிறது. அதிலிருந்து நாம் தொடங்கினோம். அதிலிருந்து கீழே வந்தோம். அவர் சேமின் கோத்திரத்திலிருந்து எழும்பிடுவார், சேமுடைய வம்சத்திலிருந்து தோன்றுவார், சேம் கோத்திரம். ஆபிரகாமின் வம்சத்திலிருந்து எழும்பும் அவனுடைய சந்ததியின் மூலமாக இந்த பூமியானது ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்

என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவை ஈசாக்கு யாக்கோபு யூதாவிலுமிருந்து கடந்துவரும். நாம் அதை இன்னும் மிகவும் அதிகமாக குறுக்கிக்கொண்டே போகிறோம். அதன் பிறகு நாம் இஸ்ரவேலில் இருந்து எழும்பும் ராஜாக்களைக் குறித்து பேசினோம். ஆவர் மோசேயைப் போல தீர்க்கதரிசியரியருப்பார், விடுவிக்கும் தீர்க்கதரிசியாக தலைவராயிருப்பார். அது நித்தியமாக என்றென்றைக்கும் உள்ள வீட்டின் பங்காக இருக்கும். இப்படிபட்ட அடையாளத்தை உடையவர் இறுதியில் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார், தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பார், தேவனால் அழைக்கப்பட்டவர், அவருடைய அதிகாரத்தையும் முன்னுரிமையையும் சந்ததியை உருவாக்குகிறவருமாயிருப்பார். பொதுவாக முற்பிதாக்களின் வம்சத்தின்படி கனமும் மதிப்பும் மூதாதையர்களைச் சேர்ந்திடும், இல்லை, இந்த விஷயத்தில் எல்லா கனமும் வாரிசுக்குத்தான் சேர்கிறது அவர் தான் உன்னதங்களில் தேவனோடு வீற்றிருப்பார். இந்த சம்பவத்தைதான் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம், இப்போது தான் அதை துவங்கியிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** சரிதான், மேலும், நீங்கள் இதனுடைய ஆதார வசனங்களை அறிந்துகொள்ள விரும்பினால், நீங்கள் முந்தைய நிகழ்ச்சிகளின் வசனக்குறிப்புகளை எடுத்துக்கொள்ளுங்கள், அதில் வசனங்களையும் வாசித்திருக்கிறோம். இப்போது தொடர்ந்து பார்க்கலாம். அதை நாம் தொடாந்;திடலாம், டாக்டர் கெய்சர். இப்போதும் நாம் பார்க்க இருப்பது ஏசாயா 9 6-7 இது மிகவும்

சிந்திக்கவைக்கும் விஷயம், வியப்பானது, முன்னறிவிக்கபட்டமு. ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார், “நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்.” அவர் என்ன சொல்கிறார், “கர்த்தர்துவம் அவர் தோளின் மேல் இருக்கும்.” அவர் தொடாந்து சொல்கிறார், “அவருடைய நாமம் ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு. அவருடைய கர்த்தர்த்துவத்தின் பெருக்கத்திற்கும் அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை. தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்துவார், சர்வவல்லமையுள்ள கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.” இதை விளக்கிடுங்கள்.

டாக்டர். வால்டர் கெய்சர்: வெல் இதுவொரு அருமையான பகுதி, ஏனெனில் இதுபிதாவாகிய ஆகாஸசிற்கு சொல்லப்பட, வில்லை, “நமக்கு கொடுக்கப்பட்டார்”. அதை மிகவும் தெளிவாக குறிப்பிட்டு சொல்கிறார். அதுதான் நமக்கு ஆர்வத்தை கொடுக்கிறது. எதற்காக நமக்கு கொடுக்கNவுண்டும்? ஏனெனில் நமக்கு கொடுப்பதகா சொல்லப்படுகிறது. எனவே ஒரு பாலகன் பிறக்கிறார், ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவமும் அனைத்து பொறுப்புகளும் அதிகாரங்களும் அவருடைய தோளின் மேல்இருக்கும். அதன் பிறகு, அதாவது எல்லாவற்றையும் அவர் நிறப்பிடுவார். இந்த பாலகனின் பெயர் என்ன? அவருடைய நாமம், “அருமையான ஆலோசகர்.” இந்த “அருமை” என்பதற்கு

ஜெர்மானியில் வுன்டர்பார் என்பதாகும். வுன்டர்பார். அவர் ஒரு ஆலோசகராக மிகவும் அருமையாக ஆச்சரியமானவைகளை செய்திடுவார். அவர் எல்- கிபோராவார், வல்லமையுள்ள தேவன். அவர் நித்தியத்தின் பிதாவாக இருக்கிறார், நித்திய பிதா. அதற்கும் மேலாக, அவர் சமாதானப் பிரபு. அவர் அப்படி என்ன செய்திடுவார்? நாம் 2 சாமுவேல் 7ல் பேசிய அந்த தாவீதின் சிங்காசத்தில் உட்கார்ந்து ஆளப்போகிறவர் இவர்தான். அவருக்கு ராஜாசனமும் சிங்காசனமும் சந்ததியும் இருக்கிறது, அது எவ்வளவு காலத்திற்கு? அது என்றென்றைக்கும் நித்தியநித்தியமாயிருக்கும். இந்த ராஜ்யம் இப்போது யூதாவையும் ஆகாசையும் உளுக்கிக்கொண்டிருக்கும் வடதேசத்து 2 ராஜாக்களின் பயமுறுத்தல்களுக்கு மத்தியில் இயங்கிடும். இதுதான் அந்த வார்த்தை, "நம் எல்லாருக்காகவும் ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், நம் அனைவருக்காகவும் ஒரு பாலகன் பிறந்திருக்கிறார்." என்னவொரு தீர்க்கதரிசனம்!

**ஆன்கர்பெர்க்:** ஆமா. இந்த வார்த்தைய விவரியுங்கள் "அதிசயமானவர்." இதன் எபிரேய வார்த்தை பீலா. இதை வேறெந்த இடத்தில் பார்க்க முடியும்?

**கெய்சர்:** ஆமா, இந்த வார்த்தை, உதாரணத்திற்கு, ஆதியாகமம் 18 14ல், இருக்கு அங்கு சாராள் - அவள் 90 வயதாயிருந்த போது, ஆபிரகாமிற்கு 100 வயது - அவர்களுக்கு பிள்ளை பிறக்கும் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது. அவள் சிரித்தாள். அப்போது அவள், "இதுவரை இந்த மாதிரி விஷயத்தை நான் கேட்டதில்லை என்றாள்."

அப்போது தேவன் சொன்னார், "அன்பே, நான் உனக்கு அவகாசம் தருகிறேன், "ஹனி, நீ சிரிக்கவேண்டாம். உனக்காக சிரித்திடு, ஏன்னா நீ அதை கேலியாக பார்க்கிறாய். அதனால் அவன் ஈசாக்கு எனப்படுவான், அதன் அர்த்தம் நகைப்பு." நான் அதை இப்படித்தான் பார்க்கிறேன். அதுமாத்திரமல்ல இன்னொரு சம்பவத்தை நாம் எரேமியா 32ல் பார்க்க முடியும் தேவன் தமது ஜனங்களை மீண்டும் வாக்குத்தத்த பூமிக்கு அழைத்து வருவதாக வாக்களிக்கிறார், ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குத்தத்தம் ஆதியாகமம் 12:7. மேலும் அவர், "அவரால் கூடாத காரியம் உண்டோ, செய்யக்கூடாத அதிசயம் உண்டோ, பீலோ ஏதாகிலும் உண்டோ என்கிறார்.இந்த வார்த்தை சொல்லப்பட்டுள்ளது. "செய்யக்4டாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" இல்லை! அதுதான் என் நாமம், அதுதான் என் குணம், அதுதான் என் வேலை.

**ஆன்கர்பெர்க்:** யூதர்கள் இதை விளங்கிக்கொண்டனரா, ஏசாயா இதை கூறினபிறகு இயேசுவின் காலத்தில், மேசியாவை போன்ற விசேஷமான ஒருவரை குறிக்கிறதென உணர்ந்தனரா?

**பாக:** தேவனுடைய கண்ணோட்டத்தின்படியாகவும் அவர் இஸ்ரவேலுக்கு வாக்களித்தபடியாகவும் பார்க்கும் போது புலப்படுகிற ஒரு விஷயம் அவர் ராஜாவாக இருந்தாலும் அவருக்குள் சமாதானம் இருந்திடும், அதனால் இஸ்ரவேலர் நம்பிடுவார்கள். அதனால் இயேசுவின் காலத்தை நாம் பார்க்கும் போது அவர்களுக்குள் இந்த எதிர்பார்ப்பு இருந்தது, அவர்களுடைய

மௌனம் அதை நிராகரித்தது, அரசியல் ரீதியாக வருவார் என்றனர், இவர் முழுவதும் சமாதானத்தை கொண்டவராக இருந்தார், மேலும் இவர், அதாவது, முற்றிலுமாய் தேவனுடைய தயவினாலும் அவருடைய பிரசன்னத்தினாலும் நிறைந்திருந்தார் அதுதான் விசேஷித்த தருனமாயிருந்தது. வேறுவார்த்தையில் சொன்னால் பறிமுதலின் காலம், அதுதான் இறுதியான நேரம், கடைசி தருனம், வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் வந்தது. உண்மையில், அவர்கள், யூதர்கள் இயேசு இருந்த காலத்தில் இப்படிபட்ட ஒருவரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இந்த வர்ணனைகள் அவர்கள் கற்பனைக்கு எட்டாதிருந்தது, அதோடு அவர்கள், தேவன் தம்முடைய கிரியைகளை நடப்பிக்கும் பாத்திரம் ஒரு ராஜாவாக தோன்றுவார் என எதிர்பார்த்திருந்தனர்.

**ஆன்கர்பெர்க்:** 2 விஷயங்கள், டேரல், இந்த வேத பகுதியில் நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், அவர் வல்லமையுள்ள தேவனாயிருப்பார் என்று சொல்லப்படுகிறது.

இப்ப, இஸ்லாமியத்தில், அப்படி நடக்காது. பாரம்பரிய யூத முறையில், ஒரே தேவன் தான்.

இங்க, ஒரு யூத தீர்க்கதரிசி தான் நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்படுவார், அவருடைய நாமம் நித்திய பிதா என்னப்படும் , வல்லமையுள்ள தேவன் என்கிறார்.

**பாக:** ஆமாம், என்னை பொறுத்தவரையில் இந்த காலகட்டத்தில் யூதர்களுடைய நினைத்தது என்னவென்றால், அவர்கள் இந்இந்த

மனிதனாக வந்தவர் தெய்வீகத்தன்மையை கொண்டிருக்கும் அந்த நெருக்கமான உறவை அவர்கள் மிக எளிமையானதாக எடுத்துக்கொண்டனர். அவர்களுடைய எண்ணம் எல்லாம் மனுதனாக இருந்தாலும் தேவனைப் போல அதிகாரத்தோடு செயல்படுவதை எதிர்பார்த்தனர். அவர்கள் கண்ணோட்டம் அப்படியிருந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டை நாம் பார்க்கும் சமயத்தில் எப்படி இயேசுவோடு இவை ஒத்திருக்கிறதென பார்க்க முடியும். தேவன் இயேசுவின் சார்ப்பில் நிகழ்த்தும் அனைத்து காரியங்களும், "இல்லை,இல்ல,இல்ல,இல்ல,இல்ல,இல்ல,இல்ல, உங்களுக்கு புரியவில்லை என்கிறது. நான் சொன்னதை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை என்கிறார். உங்களுடைய கற்பனைகளுக்கும் அப்பார்பட்ட காரியம் இருக்கிறது." பிதாவிற்கும் குமாரனுக்கும் இடையிலுள்ள உறவானது உண்மையான தகப்பனுக்கும் மகனுக்கும் இடையில் உள்ள உறவு போன்றது.

**ஆன்கர்பெர்க்:** இது நம்மை உளுக்கிடும் வசனம் தான், டாக்டர் கெய்சர். அதாவது, இந்த வார்த்தைகளில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளை நம்முடைய மனதில் பதித்துக்கொள்வது சிறது கடினமான காரியம் தான்.

**கெய்சர்:** ஆமாம், அதாவது ஒரு மகன் எப்போதாவது வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு, அதிசயமான ஆலோசகர் என்றால், அது சாதாரன மகனல்ல. இந்த பூமியில் நமக்கு தெரிந்து அந்த மாதிரியான மனுஷன் இருந்ததில்லை. இவர்

நிச்சயம் பரலோக வாசியாக இருக்கவேண்டும். இதற்கு நிச்சயம் அவரைப் போன்ற ஒப்புமை --இல்ல, அவருடைய சாயலுக்கும் மேலான ஒன்று - நிச்சயமாக, மேசியாவைப் போல வேறு ஒருவாராலும் அப்படியிருக்க முடியாது, அவர் தேவனுடைய குமாரன்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இதை நீங்கள் ஒருசில நிமிடம் சிந்தித்துப்பாருங்கள். இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம் அடுத்த நிலையை அடையப்போகிறோம். ஏசாயா புஸ்தகத்தை பார்ப்போம். பாடு அனுபவிக்கும் ஊழியன் யார்? ஏசாயா விவரித்து சொல்லும் ஊழியன் யார் அதை ஏசாயா 52,53, மற்ற இடங்களில் பார்க்கலாம். இணைந்திருங்கள். மீண்டும் சந்திப்போம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் இப்போது டாக்டர் வால்டத் கெய்சர் மற்றும் டாக்டர் டேரல் பாக்குடன் பேசிக்கொண்டிருக்கிறோம் இப்போது நாம் பேசிற காரியங்கள் இருமையான தீர்க்கதரிசனங்களைப்பற்றியவை, முன்னுரைக்கப்பட்ட, தேவன் பழைய ஏற்ப்பாட்டில் சொல்லியிருப்பவை, அவர் எதிர்காலத்தில் அனுப்பிவைத்திடுத்திடும் மேசியாவை குறித்து சொன்னவைகளை பார்த்துக்கொண்டிருக்கிறோம், ஆல்ரைட். இப்போது ஏசாயா 53 மற்றும் 52லிருந்து தொடங்கிடலாம். முதலில் ஏசாயா 52ஐ பார்ப்போம், உங்களுக்காக திரையில் போடுகிNறும்.

ஏசாயா 52 13-15 கூறுகிறது, “இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார்.” அல்லது ஜெயம் பெறுவார். “அவர் உயர்த்தப்பட்டு மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார். மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும் மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும் இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தனர். அப்படியே அவர் அநேகம் ஜாதிகள் மேல் தெளிப்பார். அவர்நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள். ஏனெனில் தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள். கேள்விபடாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள்.” இது குழப்பமா இருக்கு, டாக்டர். கெய்சர். கேள்வி என்னன்னா: யார் இந்த தாசன், இங்க என்ன நடக்குதுன்னு சொல்லுங்களே,

**கெய்சர்:** சரி, இந்த முன்னுரையான வார்த்தையில் ஆரம்பிக்கிறது, “ஹே,ஹே, பொரு, கவனி, இங்கபார்! இது ரொம்பவும் முக்கியமானது.” உங்களுடைய சத்தத்தை நீங்கள் எக்காள சத்தத்தப்போல உயர்த்தி சொல்லனும் இது ரொம்ரொம் முக்கியமானது. அவர் இப்பதொன அறிமுகப்படுத்துகிறார், “என் தாசன்”. சரி, தேவனுடைய ஊழியக்காரன் என்பது மிகப்பெரிய கனத்துக்குரிய பெயர்தான். உண்மைய சொன்னா, இந்த வார்த்தை தா மேசியா என்ற வார்த்தையை விட மிக அதிகமாக சொல்லப்பட்டிருக்கு “மேசியாக்கும்” மேல். மோத்தம் 39 தடவை “மேசியா” என்றிருக்கிறது, அதில் 9 முறை மட்டுமே நாம் பேசிக்கொண்டிருக்கும் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசன

வார்த்தையாகும். ஆனால் தேவனுடைய தாசன் என்ற வார்த்தைதான், அவரை குறிப்பதற்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இப்ப, தாசன் என்பது ஒருவரையோ அல்லது பலரையோ குறித்திடும். அதாவது, முதலாவதாக, தாசன் என்பது முழு இஸ்ரவேலையும் குறிக்கலாம். உதாரணமாக, பல சயமங்களில் அவர் யாக்கோபைக் கூட்டிச் சேர்ப்பதே என் திட்டம் என்று சொல்வதை கேட்டிருக்கலாம். சரி, தாசன் என்பது இஸ்ரவேலாக இருந்தால், எப்பn அவர் இஸ்ரவேலை மறுபடியும் தன்னிடமாக திருப்பிக்கொள்வார்? அவர் வேறொரு நபராக இருக்க வேண்டும். அப்படியிருந்தால் அவர் தன்னிடமாக அவர்களை சேர்த்துக்கொள்வார். இதிலிருந்து தாசன் என்பது தனிநபரையும் குறிக்கும் பலரையும் குறிக்கும் என்பதற்கு உதாரணம் இருக்கிறது அது, தேசமாகவும் இருக்கலாம்.

நம்முடைய ஏசாயா 52ங்கு வருவோம், என் தாசன் வெற்றிபெறபோகிறார். அது பெரிய கருத்தரங்களில் தொங்கிடும் பேனருக்கு ஒப்பாக இருக்கிறது, "நகங்களை கடிக்காதீர்கள். என் தாசன் வெற்றி பெறப்போகிறார். ஆவர் நிச்சம் ஜெயிப்பார்." இப்பதொன் யோசுவா 1ல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவர் உயர்த்தப்பட்டு மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார். சிலர் இதை மூன்று நிலையை உடைய மரணம் அடக்கம் உயிர்த்டிதழுதல் என்பதாக சொல்கிறார்கள். அந்த அளவிற்கு போகவேண்டியதில்லை. ஆனால் வசனம் 14 -15ல் அடைந்தபடியினாலே" என்றும் வசனம் 15,

ஏனெனில்" என்றும் இருக்கிறது. வசனம் 14 நம்முடைய கர்த்தராகிய ஆண்டவரின் முதல் வருகை. ஆவர் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். அவரை கண்டு அநேகர் பிரமிப்படைந்தார்கள். அவர் எப்படி அடிக்கப்பட்டிருக்கிறார் பாருங்கள் என்றனர். ஏன், அவர் மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வை இவ்வளவு அந்தக்கேடாக இருந்தது. சிலுவையின் மரணத்தினால் வந்தது. ஆனால், அவர், நம்முடைய தேசத்தின் பிரகாசிப்பை ஸ்தம்பிக்கவும் செய்திடுவார் என்பது நிச்சயம். எதனால், ராஜாக்கள் பயந்து, "என், வாயை மூடிக்கொள்கிறேன்," என்கின்றனர் ஏனெனில் அவர்கள் அதிர்ச்சியடைந்திருக்கின்றனர், இதுவரை அவர்கள் கண்டிராததை அவர்கள் கேள்விப்பட்டாதால் அதிர்சியடைந்தனர்.

ஒரு நாள் வரும் அதில் அவர் ராஜாதி ராஜாவாக கர்த்ததாதி கர்த்தாவாக வருவார். இப்படி எல்லாம் ஆரம்பமானது. இங்கு சில சோகமான காரியத்தையும் சொல்லவேண்டும், ஆனா நீங்க தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுதான், அவர் ஜெயம்பெற்றார். அவருக்குதான் வெற்றி. அவருடைய முதல் தோற்றம் மங்கியதுபோலவும் முடிவு சோகமாகவும் இருந்திருக்கலாம். அது, போகட்டும்! என்ன நடக்குதென்று பாருங்கள். வசனம் 15ல் அவர் எல்லாவற்றின் மீது ஜெயமெடுக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** டேரல்?

**பாக:** சரி, இந்த இடததில் தாழ்ந்து போய் பிறகு மேன்மையான பாதையை அடைகிறோம். அதாவது உயர்த்தப்படுவார் என்பதைக் குறித்து ஆரம்பத்திலிருந்தே சொல்லப்பட்டு வருகிறது, ஆனா இ;நத இடத்தில் அந்தக்கேடு அடைந்த பார்க்க சகிக்க முடியாத தோற்றம் என்று சொல்லும்போது, யார்… திடீரென்று நிலைமாற்றம் உண்டாகிறது. இந்த நிலைமாற்றம் யாரும் புரிந்துகொள்ள முடியாதபடி அவ்வளவு துரிதமாயிருந்தது. மேசியா பாடுபடுவார் என்ற கருத்தை ஏற்காததினால் யூதமக்களால் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ள முடியாமல் போனது. அவையனைத்தையும் அவர்கள்hல் ஒன்றிணைத்து பார்க்க முடியவில்லை. இவையிரண்டையும் ஒரே வரியில் வைக்க முடியாமலிருந்தனர். ஆனால், உண்மையில், இந்த பகுதியில் நீங்கள் பார்க்கும் காரியங்கள் அநீதத்தை சுமந்தவைரை வெளிப்படுத்துகிறது, தேவனை பிரதிபளிக்கும் ஒரு நபர், நம்முடைய சார்ப்பில் பாவத்தை ஏற்றுக்கொண்டு முழுவதும் அந்தக்கேடு அடைந்து புறக்கணிக்கப்பட்டு நிற்கிறார். ஆனாலும், இந்த புறக்கணிக்கப்பட்டவர் தான் உயர்த்தப்படும் நபராக இருக்கிறார். அதனால் நாம் தாழ்விலிருந்து மேன்மைக்கு நேராக போகிறோம்.

**ஆன்கர்பெர்க்:** அருமையாக சொன்னீங்க, டாக்டர் கெய்சர். நீங்க தாசன் என்பதை பற்றி ஐந்து, வரிகளாக, சொல்லியிருக்கீங்க. முதல் குறிப்பை நாம் பார்த்தோம். இப்போது இந்த இரண்டாவது வரியை பார்த்திடலாம், அதை நீங்கள், "தாசனுடைய புறக்கணிப்பு என்கிறீர்கள்."

தேவன் முன்னறிவித்த யாவும் அவருக்கு சம்பவிக்கும். நான் அதை வாசிப்பதற்கு பதிலாக, நீங்களே ஒவ்வொரு வசனத்தையும், ஒன்றன்பின் ஒன்றாக, ஒவ்வொரு வார்த்தையாக, சொல்லுங்க (ஏசாயா)53 வசனம் 1லிருந்து.

**கெய்சர்:** சரி. ஆதிகாரம் 52ல் தாசனைபற்றிய இரகசியத்தை பெற்றுக்கொண்டோம். இப்ப 53ஐ பார்க்கலாம் எபிரேய வேதாகமத்தில் இப்படிதான் ஆரம்பிக்கிறது, "எங்களுடைய செய்தியை ஆசீர்வதித்தவன் யார், தேவனுடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" அந்த வசனம் சொல்கிறது, "அவர் இளங்கிளையைப்போல எழும்புகிறார்." அவருடைய புறக்கணிப்பை கூறுகிறது. அவர் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் எழும்புகிறார்." அவர் ஒரு நாட்புறத்தானாக இருந்தார். அவர் எல்லாராலும் ஒதுக்கப்பட்டவராய் இருந்தார். மேலும், "அவருக்கு அழகுமில்லை சௌந்தரியமுமில்லை. அவரைப் பார்க்கும் போது விரும்பத்தக்க ரூபம் வருக்கு இல்லாதிருந்தது." அவர் அசட்டைபண்ணப்பட்டு புறக்கணிக்கப்பட்டார்." அவர் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டார். அவர் அசட்டை பண்ணப்பட்டார்." அவர் பாடணுபவித்தார். பிறகு அவர், கடைசியில், "அவர் தேவனால் வாதிக்கப்பட்டார் என்றென்னினோம்." அதோடு நாம் சேர்த்துக் கொண்ட விஷயம், "ஆ, அவர் அந்த சிலுவையில் தொங்கி, அவமதிக்கப்படுகிறதினால், அவர் தேவனில்லை என்றோம்." நாமே சிலவற்றை அதில் இணைத்துக்கொண்டோம், இறுதியில் அவர் வெறும் சீரோ தான் என்றோம். நாம தா, இல்லை, அவருக்கு மதிப்பு

கிடையாது. அவருக்கு எந்த தகுதியும் கிடையாது என்றோம். எனவே அந்த சம்பவம் வெடித்தது பூம்,பூம்,பூம், வசனம் 1,2,3. அவருடைய புறக்கணிப்பின் 5 கருப்பொருளை கொண்டுள்ளது. என்னவொரு பரிதாபமான புறக்கணிப்பு.

**ஆன்கர்பெர்க்:** டேரல், இயேசுவைக் குறித்து அறிந்திராத மக்களும் இருக்கிறார்கள், அவர்களுக்கு எப்படி இரு பொருந்தும்?

**பாக:** வெல், ஒரு சுவாரஸ்யமான விஷயம் இருக்கு, நீங்கள் ஒருவேளை இந்த நிகழ்ச்சிகளை பார்த்து மேசியாவைக் குறித்து சொல்லப்படும் அனைத்தையும் கவனித்திருந்தால், நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் உயர்த்தப்பட்ட இந்த நபரை நீங்கள் அறிந்திடலாம். அதாவது, இவர் மோசேயிலும் பெரியவர். ஆவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். நீங்க இந்த காரியங்களை ஒன்றிணைத்து சொல்லனும், “இவருக்கு பயங்கரமான பின்னனி இருக்கு. அவரைப் பற்றிய அனைத்தையும் அறியவேண்டும் என்றிடுங்கள்.” இந்த எண்ணத்தோடு இயேசுவிடம் வாருங்கள். அவர் பெத்லகேமில் ஒரு மாட்டு தொழுவத்தில் பிறந்தார். அது ஒன்றும், அதாவது, அது எருசலேமின் மாலிகையில் அல்ல. அவர் எருசலேமிற்கு புறம்பான இடத்திலிருந்தார், ஆரம்பம் மிகவும் அற்பமாக இருந்தது. அவருடைய குடும்பம் கலியோவில் இருந்தது. அவரைப் பற்றி பிரபலமாக சொல்ல ஒன்றுமில்லை. ஒருவேளை ராஜ கெம்பீரத்தோற்றமாக மேசியா வருவார் என்று எதிர்ப்பார்த்த மக்களுக்கு, இயேசுவின் பின்னனியை பார்த்த போது,

தச்சனின் மகனான, அவரை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்த பகுதி நமக்கு சொல்லும் காரியம், அந்த மேசியாவை நீ கண்டடைவாய், நாம் பார்த்த இந்த மிகப்பெரியவர் வருவார், ஆனால் அவர் எந்த இடத்திலிருந்து தோன்றுவார் என்பது ஒருவரும் ஒருக்காலும் கற்பனை செய்திருக்க மாட்டார்கள். அவர் இவ்வளவு தாழ்மையாக இருப்பார் என்று எதிர்பார்க்கவில்லை, இந்த தன்மை, இந்த நிலை, இந்த தாழ்மையை, நினைக்கவில்லை. அவரைப் பார்க்கும்போது அவருடைய பின்னனியை பார்க்கும் போது நமக்கு தோன்றும் எண்ணம், “இவர் மேசியாவாக இருக்க வாய்ப்பில்லை.” இந்த வேதபகுதி சொல்கிறது, “யப், இவர் இப்படிதான் தோன்றுவார் என்பது உண்மை.” அவர் வாழ்ந்த நாட்கிளல் நடந்துகொண்டதையும் மக்களுடைய பிரதியுத்திரத்தையும் பார்த்தால், அவர் செய்த காரியங்களை மக்கள் பார்த்திருந்தாலும், அவரைவிட்டு தங்களை தூரப்படுத்தினார்கள். அதில் சிலருடைய கருத்துகளால், “அவர் இவையனைத்தையும் தேவனால் அல்ல பிசாசினால் செய்கிறார் என்றனர்.” அதனால் வாதிக்கப்பட்டார், ஒருபக்கம், தேவனிடமிருந்து, புறக்கணிப்பு, மற்றொரு பக்கம், அசட்டைபண்ணப்பட்டார், நீங்கள் எப்படிவேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். அதோடு, ஏற்கனவே வால்ட் கூறியது போல, அவர் சிலுவையில் தொங்கினாரே? மேசியா சிலுவையில் தொங்குவதா. கும் ஆன், அது எப்படி சாத்தியமாகும்? எனினும் இந்த வேதபகுதி மேசியா தோன்றுவார் என்று நீங்கள் நினைக்கும் இடத்தைவிட அவர் தோன்றும் இடத்தை ஒருவரும்

கற்பனை செய்யமுடியாது, நாம் பேசின யாவையும் அவர் கடந்துவந்தார், அதை மறுக்கவில்லை.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இவர்கள் இங்கு வந்து ஏசாயா 53றை பற்றி பேசுவது எனக்கு அதிக ஆர்வத்தை உண்டாக்குகிறது, இதை அடுத்த வாரமும் தொடர்ந்து பார்த்திடலாம். உங்களுக்கு ஞாபகம் இருக்குதா தி பேஷன் ஆ்ப் கிடைஸ்ட் வந்தபோது டையன் சாயருடன் சேர்ந்து அந்த படத்தில் மெல் கிப்சன் அருமையாக செயல்பட்டிருந்தார், அவர்கள் அழைத்த நிபுனர்களில் ஒருவர், இறையியல் நிபுனர்களில் ஒருவர், டேரல் பாக். ஆவர் அங்கு உட்கார்ந்து எல்லாவற்றையும் கண்காணித்தார். அடுத்த பகுதியில் அதைப் பற்றியும் அந்த படத்தில் மெல் கிப்சனைக்குறித்தும் பேச இருக்கிறோம், ஓகே, அது இயேசுவின் வாழ்வில் உண்மையாக நடந்தது. இருந்தாலும், பழைய ஏற்பாட்டிலிருந்து இந்த தீர்க்கதரிசனம், டாக்டா டிகய்சர், நம்மை திகைக்க வைக்கிறது. இந்த காரியம் ஜனங்கள் நிச்சயமாக கவனிக்கவேண்டிய ஒன்று, சொல்வத சரிதானே?

**கெய்சர்:** ஆமாம், நிச்சயமாக. இவையனைத்தும் முக்கிளமான விஷயத்திற் நேராக நம்மை நடத்திடும், அதுதான் மூன்றாவது காரியம் அது மிக அருமையான வரிகளாக இருக்கிறது. “நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பி திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்.” வழிதப்பி போகும் நிலையிலிருந்தோம், தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொருவரும்

தவறிசெய்தோம் -- தவறுசெய்திருக்கிறோம். இப்ப தேவனுடைய குமாரனாக வந்தவரையும் இழந்துவிட்டோம், அவரை தவறவிட்டோம்.

**ஆன்கர்பெர்க்:** ஆமாம், அது முற்றிலும் உண்மை தான். அடுத்த வாரம் இதை தொடர்ந்து பார்த்திடலாம் உங்கள் நண்பர்களிடமும் இதைப்பற்றி சொல்லுங்கள் அடுத்த வாரம் தவறாமல் பார்க்க உற்சாகப்படுத்துங்கள், ஏனென்றால் நமக்காக பலியான அந்த ஊழியரைக் குறித்து அறிந்துகொள்வது நமக்கு அவசியமான ஒன்று. தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2014 A.T.R.I.